Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 20, 2025

வியாழக்கிழமை 20, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 183 | பக்கம்:07 | நகரப்பதிப்பு ★ | FREE

19/19 தென்னகோனுக்கு

ஒரு நாள் விளக்கமறியல்

கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், வியாழக்கிழமை (20) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவு மாத்தறை பிரதான நீதவான் அருண இந்திக புத்ததாச, புதன்கிழமை (19) பிறப்பிக்கப்பட்டது. தொடர்ச்சி P2

தமிழ்த் தேசியத்திற்கு எதிரான இனப் படுகொலையை

‘பட்டலந்த’வில் மூடிவிட வேண்டாம்

தமிழ்த் தேசியத்திற்கு எதிரான இனப் படுகொலையை ‘பட்டலந்த’ என்ற சொல்லில் மறைத்து விட வேண்டாம். தமிழர் மீது நடத்தப்பட்டது இனப் படுகொலையல்ல என வாதிடும் நீங்கள் பட்டலந்த படுகொலை தொடர்பில் பேசுவதற்குத் தயாராகின்றீர்கள் என தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பி. சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அநியாயமாக யார் கொல்லப்பட்டார்களோ, நீதியின் கண்களுக்கு முன்னால் யார் சித்திரவதை செய்யப்பட்டார்களோ அவர்களுக்கு நீதி வேண்டும் என்பதனை வலி உணர்ந்த மக்களாக வரவேற்கின்றோம்.

அதேநேரம், தமிழ் மக்கள் மீது 1956 முதல் 2009 இறுதி யுத்தம் வரை நடந்த இனப்படுகொலைகள் தொடர்பில் நீங்கள் விவாதம் நடத்த வேண்டும். விசாரணை செய்ய வேண்டும் நீதி வழங்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (19) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் வர்த்தக, வாணிப்ப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

பட்டலந்தை மட்டுமல்ல, இந்த நாட்டில் வடக்கு, கிழக்கில் பலபகுதிகளில் வதை முகாம்கள் உள்ளன. தமிழர் வாழும் பிரதேசங்களில் நீங்கள் மண்ணைத் தோண்டினால் அங்குத் தமிழரின் மனித எலும்புக்கூடுகளைக் காணும் பிரதேசங்களாக மாறியுள்ளன. நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள்.

நாங்கள் இந்த மண்ணில் அழிக்கப்பட்ட தனி தேசிய இனம். நாங்கள் கேட்பது நீதி, அந்த நீதி நியாயமானதாக இருக்க வேண்டும்.

சர்வதேச விசாரணைக்கு உட்பட்டதாகவும், மனித நேயத்திற்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பளித்தவையாக இருக்க வேண்டும்.

பட்டலந்த வதை முகாம் தொடர்பான செய்திகள் மிகப் பரவலாக வெளிவருகின்றன. பட்டலந்த என்பது 1988, 1989ஆம் ஆண்டுகளில் இந்த நாட்டில் இருந்த ஜே.வி.பி போராளிகளைக் கைது செய்து கொண்டு சென்று அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டதுடன், படுகொலை செய்யப்பட்டனர் என்பதற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

அர்ச்சுனாவுக்கு 8 நாள் ஊடகத் தடை

முழுச் செய்தி P3



“உதயசூரியன் உதிக்காது”

நிதர்ஷன் வினோத்

உதய சூரியன் சின்னத்தைக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

முழுச் செய்தி P2

தேசபந்து இல்லத்தில் 1,009 மது போத்தல்கள் மீட்பு

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் இல்லத்தில் சுமார் 795 வெளிநாட்டு மதுபான போத்தல்களும் 214 வைன் போத்தல்களும் மீட்கப்பட்டதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால புதன்கிழமை(19) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேடுதல் நடவடிக்கையின் போது, இரண்டு தொலைபேசிகள் மீட்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

“இந்த தொலைபேசிகளிலிருந்து முக்கியமான தகவல்களை நாங்கள் கண்டறிய முடியும்” என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

“மோடி இலங்கைக்கு போகக் கூடாது”

இலங்கை கடற்படை இந்திய மீனவர்கள் மீது தொடர் தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி அந்த நாட்டுக்குச் செல்லக் கூடாது என மாநிலங்களவையில் வைகோ வலியுறுத்தினார்.

முழுச் செய்தி P2

மஹிந்தவின் மனு தள்ளுபடி

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவுகளைக் குறைப்பதற்கான முடிவை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

அடிப்படை உரிமைகள் மனு விசாரணையின்றி உயர் நீதிமன்றத்தால் செவ்வாய்க்கிழமை (18) தள்ளுபடி செய்யப்பட்டது.

முழுச் செய்தி P2

திருமணம் முடிக்காத நண்பனின் ஆலோசனை

திருமணம் செய்து கொண்ட இள வயது நண்பன் ஒருவனுக்குத் திருமணம் முடிக்காத நண்பன் குடும்ப வாழ்க்கையைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு ஆலோசனை வழங்கி விட்டு பின்னர் தான் திருமணம் முடித்து விட்டுப் படும் கஷ்டங்களைப் போன்றே தற்போதைய அரசாங்கத்தின் நிலைமையுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட எம்.பி. ரோஹித அபேகுணவர்தன கிண்டல் செய்தார்.

முழுச் செய்தி P2

களனி பல்கலைக்கழகத்தின்

உளவியல் துறைத் தலைவர் விபத்தில் மரணம்

மீரிகம-கண்டி மத்திய அதிவேக நெடுஞ்சாலையில், செவ்வாய்க்கிழமை (18) அன்று இடம்பெற்ற விபத்தில், களனிப் பல்கலைக்கழகத்தின் உளவியல் பிரிவின் தலைவரும், மூத்த விரிவுரையாளருமான கலாநிதி என்.டி. குணேந்திர கயந்த மரணமடைந்துள்ளார்.

இந்த விபத்தில், அவரது மனைவி, மூன்று குழந்தைகள் உட்பட ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

அவரது குடும்பத்தினர் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வேனில் யாழ்ப்பாணத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மீரிகமவிலிருந்து குருநாகல் நோக்கி சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள போயவாலன் அருகே சிமெண்ட் ஏற்றிச் சென்ற லொறியின் பின்புறத்தில் வேன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேட்பு மனுக்களை ஏற்றல்

இன்றுடன் நிறைவு

336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் நடவடிக்கை 2025 மார்ச் 17 ஆரம்பிக்கப்பட்டது. அந்த நடவடிக்கைகள் யாவும், 2025 மார்ச் 20 நண்பகல் 12 மணியுடன் நிறைவடையும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முழுச் செய்தி P2

குட்டித் தேர்தலில் ஜேர்மன் பெண்

மாத்தளை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

அந்தப் பெண் இலங்கை குடியுரிமையைப் பெற்றுத் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முழுச் செய்தி P2

மரிக்காருக்கு சந்தேகம்

சித்திரவதை முகாமுடன் தொடர்புடைய குற்றவாளிக்கு அரசாங்கம் தண்டனை வழங்கும் என்பது சந்தேகமானது என்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (19) நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முழுச் செய்தி P2

கோட்டாவுக்கான அழைப்பாணை இரத்து

கடந்த 2011ஆம் ஆண்டு இரண்டு மனித உரிமை ஆர்வலர்களான லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் போனமை தொடர்பாக சாட்சியமளிக்க யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பாதுகாப்பு செயலாளராக பணியாற்றிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட அழைப்பாணையை ரத்து செய்த மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஜூலை 30 ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (18) நிர்ணயித்துள்ளது.

முழுச் செய்தி P2

சா/த விடைத்தாள் வேனை மறித்த ஜீட்டோ

ரஞ்சித் ராஜபக்ஷ

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில், செவ்வாய்க்கிழமை (18) அன்று நடைபெற்ற பரீட்சைக்கான விடைத் தாள்களை ஏற்றி வந்த வேனை, முச்சக்கரவண்டியொன்று மறித்துள்ளது.

ஹட்டன்-புளியாவத்தை பகுதியிலேயே இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில், குறித்த முச்சக்கரவண்டியின் சாரதி, அந்த வேனில் பயணித்த, அதிகாரிகளையும் திட்டியுள்ளார்.

முழுச் செய்தி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

‘பட்டலந்த’வில் மூடிவிட வேண்டாம்

அந்த அறிக்கை இவ்வளவு காலமும் கிடப்பில் இருந்து, இப்போது அல்ஜசீராவுக்கு ரணில் விக்ரமசிங்க வழங்கிய பேட்டிக்குப் பின்னர் அந்த அறிக்கை வெளியில் வந்துள்ளது.

ஆனால், 88/89இல் நடந்த ஜே.வி.பி மீதான படுகொலைகள் தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நா.வில் அறிக்கையொன்றையும் சமர்ப்பித்துள்ளார். ஜே.வி.பி. மீதான படுகொலைகள் தொடர்பான செய்தியை அவர் அங்கு கொண்டு சென்றிருந்தார். ஆனால், அந்தக் காலத்தில் இதற்கான தீர்வுகள் எட்டப்படவில்லை.

ஜே.வி.பி. அடுத்து வந்த ஆண்டுகளில் சந்திரிகாவுடன் இணைந்து ஆட்சி செய்த போதும் பட்டலந்த படுகொலைகள் தொடர்பில் எவ்வித கோரிக்கைகளையும் விடுக்கவில்லை. அது ஏன் என்று தெரியவில்லை. அந்த விடயத்தை இப்போது கையில் எடுத்திருப்பது நியாயமானது. இது தொடர்பில் விசாரணை வேண்டும். நாட்டில் படுகொலை செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு நீதி வேண்டும்.

கதிர்காமத்து அழகி மனம்பேரியைச் சொந்த சகோதர இராணுவத்தினரே நிர்வாணமாக்கி படுகொலை செய்தார்கள் என்பது உலக வரலாற்றில் மிக கேவலமான பதிவாக உள்ளது. அவ்வாறான இந்த நாட்டில் அதற்கு நீதி வேண்டும் என்று நான் பல தடவைகள் கூறியுள்ளேன்.

அதேபோன்று, தமிழ்த் தேசிய இனம் சார்ந்த இசைப்பிரியா, கிருஷாந்தி போன்றோர் பாலியல் வன்புணர்வுக்குப் பின்னர், அவர்கள் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களுக்கான நீதி விசாரணைகளையும் நாங்கள் பல இடங்களில் கோருகின்றோம். தமிழர்களுக்கு நடந்தது மிகப்பெரிய இனப் படுகொலை. ஆனால், சிங்கள மக்களுக்கு அவர்களின் எழுச்சி, கிளர்ச்சிகளுக்கு எதிராக இந்த வதை முகாம்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பல ஆண்டுகளில் தமிழர்கள் மீது படிப்படியாகப் பல இடங்களில் படுகொலை முயற்சிகள் இடம்பெற்றன என்றார்.

ஒரு நாள் விளக்கமறியல்

மேலும், பிணை வழங்குவது குறித்து வியாழக்கிழமை(20) பரிசீலிப்பதாக நீதவான் அறிவித்தார்.

திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 19 நாட்களுக்குப் பிறகு தேசபந்து தென்னகோன் மாத்தறை நீதிமன்றத்தில் புதன்கிழமை (19) காலை ஆஜரானார்.

மாத்தறை வெலிகம பெலேன பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், தன்னை கைது செய்யுமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரை இரத்து செய்யுமாறு கோரி தேசபந்து தென்னக்கோனால் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த ரிட் மனு மேல்முறையீட்டு நீதிமன்றினால் கடந்த 17ஆம் திகதி நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

“மோடி இலங்கைக்கு...

இது தொடர்பாக மாநிலங்களவையில் பேசிய வைகோ, “கடந்த 40 ஆண்டுகளில் 843 மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். ஜனவரி 25ஆம் திகதி முதல் 45 நாட்களில் பல்வேறு தாக்குதல்களை இலங்கை கடற்படை நடத்தி இருக்கிறது.

ஜனவரி 25 அன்று 3 படகுகளில் ராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 34 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்தது. எல்லை தாண்டி மீன் பிடித்ததாக அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அவர்கள் அடைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு லட்சக்கணக்கான ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

பெப்ரவரி 2ஆம் திகதி ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் ஏராளமான படகுகளில் மீன் பிடிக்க சென்றனர்.

அவர்களில் 10 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து, அவர்களின் படகையும் பறிமுதல் செய்தது. பெப்ரவரி. 19ஆம் திகதி, இலங்கை கடற்படை 42 இந்திய மீனவர்களைக் கைது செய்தது.

இலங்கை கடற்படையின் மனிதநேயமற்ற இத்தகைய நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நமது மீன்பிடி தொழிலை அழிக்க இலங்கை கடற்படை விரும்புகிறது. நமது கடற்படை அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறது? நாங்கள் இந்திய அரசுக்கு வரி செலுத்துகிறோம். தமிழக மீனவர்கள் என்ன அனாதைகளா?

நமது நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கைக்குச் சென்று அந்நாட்டின் ஆட்சியாளர்களைச் சந்தித்தார். நமது வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரும் அதேபோல் சந்தித்தார். ஆனால், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

தற்போது என்ன காரணத்துக்காக நமது பிரதமர் நரேந்திர மோடி இலங்கை செல்கிறார்? இலங்கை அரசுக்கும் அதன் கடற்படைக்கும் கண்டனம் தெரிவிக்கப் போகிறாரா? இன்றும்கூட ராமேஸ்வரம், தங்கச்சிமடம் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மீனர்கள் இந்திய அரசிடம் நீதி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரதமரைச் சந்தித்து இது தொடர்பாகப் பேசி இருக்கிறார். வெளியுறவு அமைச்சரையும் சந்தித்துப் பேசி இருக்கிறார். பலமுறை கடிதம் எழுதி இருக்கிறார். அவை அனைத்துமே குப்பைத் தொட்டியில் போடப்பட்டுவிட்டன .

இதுதான் இந்திய அரசு தமிழக மீனவர்களை, இந்தியக் குடிமக்களை நடத்தும் விதமா? இனிமேலாவது, நீங்கள் அங்கே செல்லாதீர்கள், அவர்களை இங்கே வரவழையுங்கள்.

இந்தியக் கடற்படை ஒருமுறையாவது ஒரு துப்பாக்கிச் சூட்டையாவது நடத்தி இருக்கிறதா? இவ்விஷயத்தில் இந்தியக் கடற்படையும், இலங்கை கடற்படையும் இணைந்து செயல்படுகிறார்கள். இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. மொத்த தமிழகமும் இந்திய அரசால் கைவிடப்பட்டது போல் உணர்கிறது” என தெரிவித்தார்.

வைகோவின் உரைக்குப் பதில் அளித்த மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், “அவையின் மூத்த உறுப்பினர் வைகோ உணர்ச்சிப்பூர்வமாகப் பேசினார்.

அவரது கவலையை நாங்கள் புரிந்து கொள்கிறோம். ஆனால், அவர் பேசியதில் ஒரே ஒரு வார்த்தை அவர் கோபத்தில் பேசி இருக்கிறார் என கருதுகிறேன்.

அந்த வார்த்தை குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனெனில், அது உண்மையல்ல. நமது மீனவர்களைத் துன்புறுத்துவதற்காக நமது கடற்படை,

இலங்கை கடற்படையுடன் இணைந்து செயல்படுமா?

இந்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. 2014இல் பிரதமர் மோடி பதவியேற்ற உடனேயே, இலங்கை அரசுடன் பேசினார். இலங்கை சிறையில் உள்ள இந்திய மீனவர்களை உயிருடன் திருப்பி அனுப்ப வேண்டும் என கூறினார்.

நமது மீனவர்களுக்கு உதவுவதற்கான ஒரு வாய்ப்பையும் நாம் வீணடிக்கவில்லை. நமது மீனவர்களுக்கு எப்போது எல்லாம் பிரச்சினை ஏற்பட்டுள்ளதோ அப்போதெல்லாம் நமது வெளியுறவுத்துறை அமைச்சகமும், பிரதமரும் உதவி இருக்கிறார்கள்.

வைகோவின் கவலைகள் அனைத்தையும் நான் அங்கீகரிக்கிறேன். ஆனால், அந்த ஒரு வார்த்தையை மட்டும் நீக்க வேண்டும் என்று அவைத் தலைவரைக் கோருகிறேன்” என குறிப்பிட்டார்.

இதையடுத்து அவையை நடத்தி வந்த துணைத் தலைவர் ஹரிவன்ஷ், வைகோவின் அந்த குறிப்பிட்ட வார்த்தையை நீக்க உத்தரவிட்டார்.

“உதயசூரியன் உதிக்காது”

தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அனுப்பி வைத்த கடிதத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்க்க முடியாத காரணத்தினால் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்ய முடியவில்லை என தெரிவிக்கிறோம் என்றுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரிக்காருக்கு சந்தேகம்

‘பட்டலந்த’ தொடர்பில் தேடும் போது நாடு பூராகவும் கொல்லப்பட்டவர்கள் தொடர்பிலும் தேட வேண்டும். பட்டலந்த வதைக்காரருக்கு தண்டனை கொடுக்கும் நடவடிக்கையுடன் இவை தொடர்பிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

25 வருடங்களாக இருட்டு அறையில் இருந்த அறிக்கையை வெளியில் எடுப்பதற்கு அல்-ஜசீராவில் தகவல் வெளியான பின்னரே இப்போது அறிக்கையைச் சபையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இனியாவது 1988/89இல் நடந்த சகல கொலைகள் தொடர்பிலும் மீள முழுமையான விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

குட்டித் தேர்தலில் ஜேர்மன் பெண்

ஜேர்மன் பெண் சுயேச்சைக் குழுவின் வேட்பாளராக கலேவல பிரதேச சபைக்குப் போட்டியிட உள்ளார்.

இலங்கையில் மாற்றங்களைக் கொண்டுவரும் நம்பிக்கையுடன் தான் போட்டியிடுவதாகக் குறித்த ஜேர்மன் பெண், கட்டுப்பணத்தை செலுத்திய பிறகு தெரிவித்தார்.

கோட்டாவுக்கான அழைப்பாணை இரத்து

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. காணாமல் போனவர்களின் உறவினர்கள் உயர் நீதிமன்றத்தில் இந்த மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

மஹிந்தவின் மனு தள்ளுபடி

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது மனுவில், தனது பாதுகாப்பை 60 பணியாளர்களாகக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் முடிவைச் சவால் செய்து அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகளைக் குறைக்க அரசாங்கம் முடிவு செய்ததைத் தொடர்ந்து, கணிசமான அரசு செலவினங்களைக் காரணம் காட்டி, பாதுகாப்பு விவகாரங்களில் குறைப்பு ஏற்பட்டது.

சா/த விடைத்தாள் வேனை மறித்த ஓட்டோ

ஹட்டன், ஸ்ரீ பாத வித்தியாலயத்தில் உள்ள பரீட்சை ஒருங்கிணைப்பு நிலையத்திற்கு க.பொ.த சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை ஏற்றிச் சென்ற வேன், முச்சக்கரவண்டியுடன் மோதியதாகவும், முச்சக்கர வண்டி ஓட்டுநர் வேனில் பயணித்த பரீட்சை நிலையத்தின் கண்காணிப்பாளர் மற்றும் துணை கண்காணிப்பாளரைத் திட்டியுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் நோர்வூட் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நோர்வூட் பொலிஸ் பிரிவின் புளியாவத்தை பரீட்சை நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்த பின்னர், ஸ்ரீபாத வித்தியாலயத்தில் அமைந்துள்ள பரீட்சை ஒருங்கிணைப்பு மையத்திற்கு விடைத்தாள்களை வழங்குவதற்காக பொறுப்பதிகாரிகள் தனியார் வேனில் பயணித்துக் கொண்டிருந்தார். முச்சக்கரவண்டி ஓட்டுநர் புளியவத்தை பாடசாலையின் பிரதான வாயிலை மறித்ததை அடுத்து, முச்சக்கர வண்டியை வாயிலிலிருந்து அகற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முச்சக்கரவண்டி அப்புறப்படாததால், பரீட்சை மண்டப கண்காணிப்பாளர் வீதியை மறித்து நின்ற முச்சக்கரவண்டியில் மோதாமல் மிகுந்த சிரமத்துடன் தனது வேனை முன்னோக்கி ஓட்ட வேண்டியிருந்தது.

பின்னர் முச்சக்கர வண்டி ஓட்டுநர் சுமார் 500 மீட்டர் தூரம் வேனைப் பின் தொடர்ந்து சென்று, முச்சக்கரவண்டியை நிறுத்தி, பின்னர் வேனில் இருந்த கண்காணிப்பாளர் மற்றும் துணை கண்காணிப்பாளரை வார்த்தைகளால் திட்டியதாகத் பரீட்சை மண்டப கண்காணிப்பாளர் நோர்வூட் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து நாங்கள் விசாரித்தபோது, நோர்வூட் பொலிஸ் நிலைய அதிகாரி, சம்பந்தப்பட்ட முச்சக்கரவண்டி ஓட்டுநர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர் புளியாவத்த தமிழ் வித்தியாலயத்துக்கு அருகில் முச்சக்கர வண்டி ஓட்டிச் சென்ற ஒருவர் என்றும் கூறினார். பாடசாலை வாயிலை மறிப்பது தொடர்பாகப் பரீட்சை மண்டப கண்காணிப்பாளருக்கும் முச்சக்கர வண்டி ஓட்டுநருக்கும் இடையே வார்த்தை பிரயோகம் நடந்ததாகவும், கோபமடைந்த முச்சக்கரவண்டி ஓட்டுநர் வேனை துரத்திச் சென்று மறித்ததாகவும் கூறப்படுகிறது.

திருமணம் முடிக்காத நண்பனின் ஆலோசனை

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (19) இடம்பெற்ற 2025 பட்ஜெட் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க எதிர்க்கட்சியில் இருக்கும் போது’ பால் மா பிள்ளைகளுக்கு மிகவும் முக்கியமானது. பால் மா விலையைக் குறைக்க வேண்டும். அத்தியாவசிய பொருட்களுக்கு வரி விதிக்கக் கூடாது, அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்’ என்று குறிப்பிட்டிருந்தார். எதிர்க்கட்சியில் இருக்கும்போது, வாய்க்கு வந்தபடி பேசலாம். ஆனால், அரசாங்கத்துக்கு வந்ததன் பின்னர் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தையும் நிறைவேற்ற முடியாது.

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தன்று பால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணி என்ன, வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு கடினமானது. ஆகவே, அவதானத்துடன் செயற்படுங்கள்.

நிதியமைச்சின் அதிகாரிகள் எவரும் தேர்தலில் போட்டியிடுவதில்லை. மக்கள் மத்தியில் அவர்கள் செல்வதில்லை. ஆகவே, ஜனாதிபதியை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

400 கிராம் பால் மாவின் விலை 1,100 ரூபாய், 1 கிலோ கிராம் 2,750 ரூபாய் ஆகவே, இறக்குமதி வரியைக் குறைத்து பால் மாவின் விலையைக் குறையுங்கள். மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள் என்றார்.

இன்றுடன் நிறைவு

இதேவேளை கட்டுப்பணம் ஏற்கும் நடவடிக்கை மார்ச் 19ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு நிறைவடைந்தது.

கல்முனை மாநகர சபை, தெஹியத்த கண்டிய பிரதேச சபை , மன்னார் பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை மற்றும் எல்பிட்டிய பிரதேச சபை ஆகியவற்றுக்கு தேர்தல் நடைபெறாது.

அவற்றைத் தவிர 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெறவுள்ளது.

அதில், 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 272 பிரதேச சபைகளுக்குள் அடங்குகின்றன.

அர்ச்சுனாவுக்கு 8 நாள் ஊடகத் தடை

பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) இராமநாதன் அர்ச்சுனா, இந்தச் சபையிலும் சபைக்கு வெளியிலும் குறிப்பாக, சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி தனி நபர்களுக்கும், தனி நபர் குழுக்களுக்கும் மற்றும் பலதரப்பட்ட அமைப்புகளுக்கும் எதிராக மிகவும் இழிவான சொற்பதங்களைப் பிரயோகித்து மேற்கொண்டுள்ளதும் மேற்கொண்டு வருவதுமான சர்ச்சைக்குரிய மற்றும் இழிவுக்குட்படுத்தும் கூற்றுகளால், தனிப்பட்ட முறையில் பல்வேறு நபர்களுக்கும் பல்வேறு சமூக மற்றும் இனக் குழுமங்களுக்கும் மன அமைதியை குலைக்கும் நிலை ஏற்படுகின்றதென பல்வேறு வழிமுறைகளில் எனக்கு முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்து இந்தச் சபைக்கு தெளிவுப்படுத்த விரும்புவதாகத் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன, புதன்கிழமை (19) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிப்பின் போது, விடுக்கப்பட்ட இந்த அறிவிப்பு பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள ஊடாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

உறுப்பினர் (வைத்தியர்) இராமநாதன் அர்ச்சுனா, தனிப்பட்ட முறையில் பெண்கள் உட்பட பல்வேறு நபர்கள், பல்வேறு சமூக குழுக்கள் மற்றும் சமயக் குழுக்களை இலக்கு வைத்து முன்வைத்துள்ள பல்தரப்பட்ட, இழிவுக்குட்படுத்துகின்றதும் அநாகரிகமானதும் அத்தோடு கடுமையான சர்ச்சைகளுக்கு வித்திடுகின்றதுமான கூற்றுகள் சம்பந்தமாக பல்வேறு நபர்கள், பல்வேறு சமூக அமைப்புகள் அதேபோல், இந்தச் சீருயர் சபையை பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்க கட்சியையும் எதிர்க்கட்சியையும் சேர்ந்த பல மக்கள் பிரதிநிதிகள் உட்பட்ட பல்வேறு தரப்பினர் தனிப்பட்ட முறையில் என்னிடம் முறைப்பாடு செய்து அத்தகைய கூற்றுகள் சம்பந்தமாக அவர்களினது கடுமையான அதிருப்தியையும் கவலையையும் வருத்தத்தையும் தெரிவித்துள்ளதோடு, இந்தச் சீருயர் சபையின் தலைவர் என்ற வகையில் அத்தகைய செயற்பாடுகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஏற்கனவே என்னிடம் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்கள் எனும் விடயத்தை இச்சபைக்கு அறியத்தர விரும்புவதாகக் குறிப்பிட்டார்.

குறிப்பாக, இந்தச் சீருயர் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில், தனக்குரிய சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி, இந்தச் சபைக்கு வந்து பதிலளிக்க முடியாத தரப்பினர் சம்பந்தமாகவும் இச்சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய மக்கள் பிரதிநிதிகள் சம்பந்தமாகவும் அத்துடன் பிற பல்வேறு வெளிமட்ட சமூக மற்றும் சமய அமைப்புகள் உட்பட பல்வேறு இனக் குழுமங்களையும் இனப் பிரிவினரையும் இலக்கு வைத்து மிகவும் இழிவான சொற்பதங்களைப் பிரயோகித்து, அவர்களின் தனிப்பட்ட வாழ்வில் பாரியதொரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றதும் அபகீர்த்தியை விளைவிக்கின்றதுமான கூற்றுகளுக்கு சபாநாயகர் என்ற வகையில், தனது கடுமையான அதிருப்தியை தெரிவிப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சீருயர் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில், அவர் மேற்கொள்கின்ற இவ்வகையான இழிவுபடுத்தும் மற்றும் அநாகரிகமான கூற்றுகளால் சபையின் சீருயர் தன்மைக்கு பாரிய களங்கமும் அவமதிப்பும் ஏற்படுகிறது என்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். மேலும், இது தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் பாரிய குந்தக நிலையை ஏற்படுத்துகின்றது என்பதையும் குறிப்பிட விரும்புவதாக சபாநாயகர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில், இவ்வாறான கூற்றுகளைத் தவிர்க்குமாறு பல வழிகளில் கடிந்துரைத்தபோதிலும், அந்த அறிவுறுத்தல்களை ஏற்று நடப்பதற்கு குறித்த பாராளுமன்ற உறுப்பினர் முற்றாகத் தவறியிருப்பதனையும் நான் அவதானிக்கின்றேன்.

குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் இத்தகைய செயற்பாடுகள் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகள், பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் தொன்றுதொட்டு பேணப்பட்டு வருகின்ற தொன்மையான பாராளுமன்ற மரபுகள் ஆகியவற்றுக்கு முற்றிலும் முரணாகவும் இசைந்தொழுகாத வகையிலும் இருக்கின்றதென இங்கு விசேடமாக வலியுறுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) இராமநாதன் அர்ச்சுனாவினால் முன்வைக்கப்படும் இக்கூற்றுக்கள் தொடர்பாக மிக ஆழமாக ஆராய்ந்து, அவற்றை பரிசீலித்ததன் பின்னர் அதன் மூலம் தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்திற்கும் ஏற்படும் அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு, நிலையியற் கட்டளை ஏற்பாடுகளின் பிரகாரம், சபாநாயகர் என்ற வகையில் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2025ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20 மற்றும் 21ஆந் திகதிகளிலும், 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08, 09 மற்றும் 10ஆந் திகதிகளிலும், 2025ஆம் ஆண்டு மே மாதம் 06, 07 மற்றும் 08ஆந் திகதிகளிலும் என மொத்தமாக எட்டு (08) நாட்கள் நடைபெற உள்ள பாராளுமன்ற அமர்வுகளின்போது, பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) இராமநாதன் அர்ச்சுனாவின் எந்தவொரு கூற்றையும் செவிப்புல, கட்புல மற்றும் சமூக ஊடகங்களில் நேரடியாக ஒலி / ஒளிபரப்புச் செய்வதை இடைநிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சபாநாயகர் கட்டளையிட்டார்.

மேலும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அவ்வாறான இழிவுக்குட்படுத்தும், அநாகரிகமான மற்றும் கீழ்த்தரமான சொற்பதங்களைப் பிரயோகித்து, கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்படும் அனைத்து கூற்றுக்களையும் ஹன்சாட் அறிக்கையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என இந்தச் சீருயர் சபைக்கு அறியத்தர விரும்புவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், இவ்வாறு நேரடி ஒலி / ஒளிபரப்பை இடைநிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் காலப்பகுதியில், உறுப்பினர் ஆற்றும் உரைகளின் உள்ளடக்கம் மற்றும் தெரிவிக்கப்படும் கூற்றுக்கள் சம்பந்தமாக ஆராய்ந்து, இத்தற்காலிக தடையை நீக்குவது தொடர்பாக பரிசீலிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

புத்தாண்டு காலத்தில்

‘நிவாரண பொதி’

பண்டிகை காலத்தை முன்னிட்டு சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக 5,000 ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உணவு பொருட்கள் அடங்கிய பொதி 2,500 ரூபாய்க்கு வழங்கப்படும் என வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(19) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் பேசுகையில்,

புத்தாண்டு காலத்தை முன்னிட்டு லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக அத்தியாவசிய உணவுப் பொதிகளை நிவாரண விலைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

17 இலட்சம் பேர் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு பெறுகிறார்கள். 870,000 பேர் நலன்புரி கொடுப்பனவுக்கு புதிதாக விண்ணப்பித்துள்ளார்கள்.

சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக 5,000 ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொதி 2,500 ரூபாய் நிவாரண விலைக்கு வழங்கப்படும்.

இந்த நிவாரணப் பொதியில் நாடு அரிசி 5 கிலோ, பெரிய வெங்காயம் 2 கிலோ, உருளைக்கிழங்கு 2 கிலோ, பருப்பு ஒரு கிலோ, டின் மீன் ஒன்று, சிவப்பு சீனி 3 கிலோ, கோதுமை மா 2 கிலோ, சமபோசா 2 பெக்கட், 4 சோயா மீட் பெக்கட் உள்ளடக்கப்படும் என்றார்.

தேவை

வீடொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய, சமையல் தெரிந்த பணிப்பெண்ணொருவர் மற்றும் செவிலியர் ஒருவர் தேவை, கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டையுடன் தொடர்புக்கொள்ளவும். 077-8742463.

கம்பஹா மாநகர சபை

எல். பி-எரிவாயு மூலம் இயங்கும் சுடுகாடு கட்டுவதற்காக கட்டுமானத்திற்கான வடிவமைப்பு மற்றும் கட்டுமான ஒப்பந்தங்களுக்கான ஏலத்திற்கான அறிவிப்பு.

2025.03.18 ஆம் திகதி அன்று பிரசுரிக்கப்பட்ட மேற்கண்ட அறிவிப்பில் உள்ள பிணைப் பத்திரத் தொகை ரூ.20,000.00 க்கு பதிலாக ரூ.721,500.00 ஆக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நகராட்சி ஆணையர்
அதிகாரங்கள், பணிகள் அமுலாக்கள் அதிகாரி
கம்பஹா மாநகர சபை.

033 4942302

சிறப்புரிமைக்குள் மறைந்து சீருயர் சபையில் கீழ்த்தரமாக நடத்தல்

சட்டவாக்கம், நீதிமன்றம், நிர்வாகம் மற்றும் ஊடகம் ஆகிய நான்கும் ஜனநாயகத்தின் நான்கு தூண்களாகும். அதில், சட்டவாக்கம், (பாராளுமன்றம்) மிக உயரிய சபையாகும். இலங்கையை பொறுத்தவரையில், பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஒரு சில சம்பவங்கள், கறுப்பு புள்ளியை வைத்து விட்டன.

ஒரு காலத்தில் புத்தகங்கள், நாற்காலிகள் மற்றும் மிளகாய்ப் பொடியால் தாக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றன. அப்போதெல்லாம், அரசியல்வாதிகள் ஒழுக்கக்கேடாக நடந்து கொள்கிறார்கள். அத்தகைய அரசியல்வாதிகள் நாட்டிற்குத் தேவையில்லை என்று பொதுமக்கள் தெரிவித்திருந்தனர்.

அதேபோலவே, கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அவ்வாறான உறுப்பினர்களை மக்கள் நிராகரித்து இருந்தனர். உயரிய சபைக்குள், பொலிஸாரை வரவழைப்பதற்கு காரணமாக இருந்தவர்களுக்கு, அன்றைய சபாநாயகர் கடுமையான தண்டனையை, நீதிமன்றத்தின் ஊடாக பெற்றுக்கொடுத்திருந்தால் ஒரு பாடமாக அமைந்திருக்கும். எனினும், அவர் தவறிவிட்டார்.

இந்நிலையில், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, சபைக்கு உள்ளேயும், வெளியேயும், மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பயன்படுத்தி, பல்வேறு சர்ச்சைக்குரிய மற்றும் இழிவான அறிக்கைகளை வெளியிட்டமையால், 2025 மார்ச் 20ஆம் திகதி முதல், ஏப்ரல் 08ஆம் திகதி வரை எட்டு நாட்களுக்கு ஊடகத்தடை விதிக்கப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியில் அவர், நடந்துகொள்ளும் விதத்தை அவதானித்தே, இந்த தடை நீக்கப்படும் என்று சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன, புதன்கிழமை(19) கட்டளையிட்டுள்ளார்.

தற்போதைய சட்ட சூழ்நிலையின்படி, கடுமையான ஒழுக்க மீறல் ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட எம்.பிக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வாய்ப்பு இருக்கிறது. ஒழுக்க மீறல் ஏற்பட்டால், பிரதிநிதிகள் சபையில் இந்த விவகாரம் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பாராளுமன்ற சிறப்புரிமைகள் குழுவிற்கு ஆய்வுக்கு அனுப்பப்படும். சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில், சம்பந்தப்பட்ட வழக்கை உயர் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல சட்டப்பூர்வ அனுமதி இருக்கின்றது.

சீருயர் சபைக்குத் தெரிவாகும் மக்கள் பிரதிநிதிகள், மக்களின் இறையாண்மையைப் பாதுகாப்பது அவர்களின் பொறுப்பு. மக்களின் இறையாண்மையைப் பாதுகாக்க, பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். எனினும், மக்களுக்குப் பொறுப்புக்கூறாத பல பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர் என்பதே மக்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளாகும்.

கடந்த பாராளுமன்றங்களில், தெரிவு செய்யப்பட்டவர்களில் பலர், அந்தந்த பிரதேசங்களில் கசிப்பு விற்றவர்கள், மோசடியான செயல்களில் ஈடுபட்டவர்கள், பாலியல் வன்புணர்வு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றெல்லாம், சபைக்குள் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டமையை கேள்விப்பட்டிருக்கின்றோம். எனினும், இந்த பாராளுமன்றத்தில் பெரும்பாலானவர்கள், தங்களுடைய பெயர்களுக்கு முன்பாக பட்டங்களை வைத்திருக்கின்றனர். ஆகையால், சீருயர் சபையில் கண்ணியமாக நடத்தல் அவசியம்; அப்படி நடக்காதவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுப்பதும் அவசியமாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் அல்லது பலரின் சுயமதிப்பை உடைப்பதற்கு என்றே சில விசமிகள் காத்திருக்கின்றார்கள். பொறாமை காரணமாக, பிறர் பற்றி அவதூறு பேசுவதையே குறியாகக் கொண்டிருப்பவர்கள் சமூக விரோதிகளாவர். ஷ

வேண்டுமென்றே அபாண்டமான செய்திகளைப் பரப்புவது, பிறர் குடும்ப விடயங்களில் தலையிடுவது, வதந்தி பரப்புவது, எல்லாமே நடந்தபடிதான் இருக்கும். செவிகளைக் கண்டபடி நகர்த்தலாகாது. எல்லா விதமான மாந்தர்களும் எங்கள் முன்னால் உலாவருகின்றார்கள்.

எவருடன் நட்பு கொள்வது? எவரைக் கண்டுகொள்ளாமல் விடுவது என்பதை உங்கள் அனுபவ ஞானம் மூலம் கண்டுகொள்ள முடியும். காலங்களைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். மனிதன் மனிதனையே விழுங்குகின்ற காலம் இது. தங்கள் சுயநலத்துக்காக எதையும் செய்வார்கள்.

ஒருவரின் ஆளுமைகளை அனுபவங்களே சொல்லிக் கொடுக்கின்றன. இயற்கையாகவே மனிதர்களுக்கு புத்தி உண்டு; சிந்திக்கும் திறனும் உண்டு. நிதானம், ஆராய்வு, செயல் மாந்தர்களுக்கு பிரதானமானது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஒப்பாரி வைக்க முடியாது

முருகானந்தம் தவம்

இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் சிறீதரன்-சுமந்திரனுக்கிடையிலான முரண்பாடு, பகை, விரோதம் நீறு பூத்த நெருப்பாக முடிவின்றி தொடர்ந்து புகைந்து கொண்டே இருக்கின்றது. கட்சியின் உதவி செயலாளராக இருக்கும்போதே சிறீதரனுக்கு கட்சிக்குள் பெரும் குடைச்சல் கொடுத்து வந்த சுமந்திரன், தற்போது பதில் பொதுச் செயலாளராகி விட்ட நிலையில், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை பயன்படுத்தி இன்னும் கொஞ்சம் பலமாக சிறீதரனுக்கு எதிராக ஆட ஆரம்பித்துள்ளார்.

முதலில் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு இலக்கு வைத்த சுமந்திரன், அதில் சிறீதரனிடம் தோல்வி கண்ட நிலையில், சிறீதரனையும் தலைவர் பதவியை ஏற்கவிடாது, தடுத்து சாதித்ததுடன், அடுத்ததாகப் பாராளுமன்ற தேர்தலில் சிறீதரனுடன் போட்டியிட்ட நிலையில், அதிலும் சிறீதரனிடம் தோல்வி கண்டு பாராளுமன்றம் போகும் வாய்ப்பை இழந்தார். ஆனால், பாராளுமன்றம் போக வேண்டும் என்ற எண்ணத்தை மட்டும் அவர் கைவிடவில்லை.

இந்நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராகப் பதவியேற்ற பின்னர், எம்.ஏ.சுமந்திரன் தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில், “பாராளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளின் அடிப்படையில், யாழ். தேர்தல் மாவட்டத்திலே எங்களுடைய கட்சியிலே இரண்டாவது இடத்திலே நான் இருக்கிறேன். எங்களுடைய கட்சிக்கு இந்த தடவை ஒரு ஆசனம் கிடைத்த காரணத்தால் மட்டும் தான் நான் பாராளுமன்றத்தில் பிரதிநிதியாக முடியவில்லை. இரண்டு ஆசனங்கள் கிடைத்திருந்தால் நானும் பாராளுமன்றத்தில் இருந்திருப்பேன்.

இந்த தேர்தல் முறைமையின் கீழ், முதலாவது இடத்தை பெற்ற சிவஞானம் சிறீதரன் ஏதாவது காரணத்துக்காக எம்.பி. பதவியிலிருந்து விலகுவாராக இருந்தால், தானாகவே, எவரும் எதுவும் சொல்லாமலே நான் பாராளுமன்ற உறுப்பினராக வருவேன். அதில் எந்தத் தவறும் கிடையாது. விருப்பு வாக்கு அடிப்படையிலே நான் இரண்டாம் இடத்தில் இருக்கிறேன். எங்கள் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தல்கள் வருகின்றது என சிறீதரன் சுட்டிக்காட்டியிருந்தார். முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்குவது தொடர்பாக அவர் நேரடியாக சொல்லவில்லை. ஆனால், மாகாண சபை தேர்தல் வருகிறது. அந்த வகையில், சில மாற்றங்கள் நிகழலாம். சுமந்திரன் அந்த பதவிக்கு வரலாம் என்றும் சொல்லி இருந்தார்.

சுமந்திரனின் கருத்துக்கு, கட்சி வழக்கு நிலுவையில் உள்ளது. கட்சியில் உள்ளவர்களே வழக்கினைத் தாக்கல் செய்திருக்கின்றனர். தாயினை நீதிமன்றத்தில் வைத்துக்கொண்டு தாயிடம் உணவு கேட்பது. பால் அருந்தப் போகின்றோம் என்று சொல்வது போலுள்ளது. நாம் செய்வது இன விடுதலைக்கான அரசியல். பதவிகளுக்கான அரசியல் அல்ல, பதவிகளுக்கு அரசியல் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். இவ்வாறான சூழல் இருக்கும்போது, எனக்கு வடக்கு முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடும் எண்ணம் இல்லை என சிறீதரன் பகிரங்கமாகக் கூறி, சுமந்திரனின் மீள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசைக்கு ஆப்பு வைத்து விட்டார்.

இதனால் சிறீதரன் மீது இன்னும் சினமடைந்த சுமந்திரன், தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரண வீட்டில் தனக்கும், தனது அணிக்கும் எதிராகக் கிளம்பிய எதிர்ப்புக்கள், துரோகிகள் பட்டத்தை வைத்து சிறீதரனுக்கு எதிராகக் காய் நகர்த்தியதுடன், தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் “மாவை சேனாதிராஜா சுகவீனமடைந்ததும் அவரை நான் வைத்தியசாலையில் பார்வையிட்டேன். பின்னர் அவரின் மரணச் செய்தி அறிந்ததும் நேரடியாக அவரின் வீட்டுக்குச் சென்று அஞ்சலி செலுத்தினேன். அவரது குடும்பத்தினருடன் ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாக உரையாடினேன். ஆனால், எனக்குப் பின்னர் சென்றவர்கள் தவறாக நடத்தப்பட்டார்கள். மாவை சேனாதிராஜாவுடன் மிகவும் நெருக்கமாகச் செயற்பட்ட குலநாயகம் அங்கு முழுமையாகவே செல்ல முடியாத நிலைமை இருந்தது. மாவை சேனாதிராஜாவின் இறுதிச் சடங்கில் மரணத்துக்குக் காரணமானவர்கள் என்று நான் உள்ளிட்டவர்களின் புகைப்படங்களுடன் பதாகைகளைக் கட்டினார்கள் நாங்கள் அங்குச் சென்றால் குழப்பங்களை ஏற்படுத்த குண்டர்களும் தயார் நிலையில் இருந்தார்கள் . ஆகவே மறைந்த தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தச் சென்று அங்கு சலசலப்பு ஏற்பட்டால் அது மாவை சேனாதிராஜாவுக்கு அகௌரவத்தை ஏற்படுத்துவதாக அமைந்து விடும் என்பதனால் ஒதுங்கியிருந்தேன். அதுமட்டுமன்றி, மரணச்சடங்கில் அரசியல் செய்யும் மிக மோசமான நிலைமை இருந்தது. இந்த நிலைமைக்கு வெளியில் இருப்பவர்களும் எமது கட்சியில் சிலரும் காரணமாக இருக்கின்றார்கள் என்பது மிக மோசமான விடயம்.

நான் உள்ளிட்டவர்களின் பங்கேற்பின்மையை பெரு வெற்றியாகக் கொண்டாடுபவர்கள் இன்னும் கட்சிக்குள் இருக்கின்றார்கள். மரணச் சடங்கையே அரசியலுக்குப் பயன்படுத்துகின்ற இழிவான அணியொன்று கட்சிக்குள் இருந்தால் அந்த அணியுடன் எப்படி நான் உள்ளிட்டவர்கள் இணைந்து செல்ல முடியும்? எனவே, இந்த வேறுபாடுகள்தான் தமிழரசுக் கட்சிக்குள் இரு அணிகளாகத் தெரிகின்றன. இந்த விடயம் தொடர்பாக நாம் ஒழுக்காற்று நடவடிக்கைகளை விரைவில் எடுப்போம். கட்சித் தலைவர் தற்போது பொலிஸில் முறைப்பாட்டை செய்துள்ளார். விசாரணைகள் நடைபெறுகின்றன, விரைவில் இதன் சூத்திரதாரிகள் வெளிப்படுத்தப்படுவார்கள்” என்று கூறியிருந்தார்.

மரணச் சடங்கில் அரசியல் செய்யும் மிக மோசமான நிலைமை இருந்தது, இந்த நிலைமைக்கு வெளியில் இருப்பவர்களும் எமது கட்சியில் சிலரும் காரணமாக இருக்கின்றார்கள் என்பது மிக மோசமான விடயம். மரணச் சடங்கையே அரசியலுக்குப் பயன்படுத்துகின்ற இழிவான அணியொன்று கட்சிக்குள் இருந்தால், அந்த அணியுடன் எப்படி நான் உள்ளிட்டவர்கள் இணைந்து செல்ல முடியும்? என்பது சுமந்திரனின் கேள்வி.

மரணச் சடங்கையே அரசியலுக்குப் பயன்படுத்துகின்ற இழிவான அரசியலை முதலில் தமிழரசுக் கட்சிக்குள் ஆரம்பித்தவர் சுமந்திரன். தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் மரணமடைந்த நிலையில், சம்பந்தனின் மரண வீட்டை அரசியலாக்கி சம்பந்தனின் மரண வீட்டில் சிறீதரன் அணியினரை கிட்ட நெருங்க விடாது, சாணக்கியன். சயந்தன் என்ற இரு விசுவாசிகளை வைத்துக்கொண்டு சம்பந்தனின் மரணத்தை, மரண வீட்டை, இறுதி ஊர்வலத்தைத் தனது இழிவான அரசியலுக்குப் பயன்படுத்தியவர் சுமந்திரன்.

சம்பந்தனின் உயிர் பிரிந்தவுடனேயே சுமந்திரன் அணி சம்பந்தனின் இறுதிக்கிரியை தொடர்பான அனைத்து விடயங்களையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டதால், அடுத்து என்ன நடக்கப் போகின்றது என்பது தமிழரசுக் கட்சியினரிலேயே பெருமளவானோருக்குத் தெரிந்திருக்கவில்லை. சம்பந்தனின் மரணச் சடங்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இன்னொரு அணியான சிறீதரனின் வகிபாகம் இருந்து விடக் கூடாது என்பதில் தீவிர கவனம் எடுத்த சுமந்திரன் அணி, சம்பந்தனின் உடல் அக்கினியுடன் சங்கமமாகும் வரை சம்பந்தனின் உடலுடன் சங்கமித்தே இருந்தனர். இதனால் இலங்கை தமிழரசுக் கட்சியின் அப்போதைய தலைவரான மாவை சேனாதிராஜா, சிறீதரன் முதல் தமிழரசுக் கட்சியின் உண்மையான விசுவாசிகள் வரை வெறும் பார்வையாளர்களாக வந்து சம்பந்தனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தவேண்டிய நிலைமையை இந்த அணி ஏற்படுத்தியிருந்தது.

சம்பந்தனின் பூதவுடல் கொழும்பு பொரளை மலர்ச்சாலையிலும் பின்னர் பாராளுமன்றத்திலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட நிலையில், அவரது சொந்த ஊரான திருகோணமலைக்கு கொண்டு செல்ல முன்னர் கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்க வேண்டும் என்ற வேண்டுகோள் சிறீதரனால், சுமந்திரன் அணியிடம் விடுக்கப்பட்டு, முதலில் அது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், அச்செய்தி சிறீதரனால் ஊடகங்களுக்கும் வழங்கப்பட்டது.

இவ்வாறான நிலையில், திடீரென சிறீதரனின் இந்த வேண்டுகோளை நிராகரித்த சுமந்திரன் அணி, “சம்பந்தனின் உடல் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா நினைவரங்கத்தில் மட்டுமே அஞ்சலிக்காக வைக்கப்படும்” என்ற அறிவிப்பை விடுத்தது. அவ்வாறானால் சம்பந்தனின் உடலைத் தரை வழியாக யாழுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அப்போது, “தமிழர் பகுதிகளில் மக்கள் அவருக்கு வழி நெடுகிலும் அஞ்சலி செலுத்தக்கூடியதாக இருக்கும்” என்ற வேண்டுகோளை சிறீதரன் தரப்பு விடுத்தபோதும், அதனையும் நிராகரித்த சுமந்திரன் அணி, சம்பந்தனின் உடலை விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்று அஞ்சலிக்கு வைத்து, பின்னர் அங்கிருந்து விமானம் மூலமே திருகோணமலைக்கும் எடுத்துச் சென்றது.

இவ்வாறு சிறீதரன் அணியினரை சம்பந்தனின் இறுதிக்கிரியை காரியத்தில் நெருங்க விடாது பார்த்துக் கொண்ட சுமந்திரனுக்குத்தான் தரும்போது, தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரண வீட்டில் சிறீதரனுக்கு ஏற்பட்ட அதே நிலைமை ஏற்பட்டுள்ளது. மரணச் சடங்கையே அரசியலுக்குப் பயன்படுத்துகின்ற இழிவான அணியொன்று கட்சிக்குள் இருந்தால், அந்த அணியுடன் எப்படி நான் உள்ளிட்டவர்கள் இணைந்து செல்ல முடியும்? என கேள்வி எழுப்பும் சுமந்திரன், தான் அந்த இழிவான அரசியலின் ஆரம்ப கர்த்தா. ஆனால், அவரைப் பொறுத்தவரையில் ‘மற்றவர்களுக்கு வந்தால் அது தக்காளி சட்னி தனக்கு வந்தால் அது இரத்தம்’ என்ற சித்தாந்தமேயுள்ளது.

ஆக, சம்பந்தனின் மரண வீட்டில் இழிவான அரசியல் செய்த சுமந்திரனை, அதே தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரண வீட்டில் ‘கர்மா’ தாக்கியுள்ளது. எனவே, மரணச் சடங்கையே அரசியலுக்குப் பயன்படுத்துகின்ற இழிவான அணியொன்று கட்சிக்குள் இருக்கின்றது என சுமந்திரன் ஒப்பாரி வைக்க முடியாது. ஏனெனில், அந்த இழிவான அரசியலின் ஆரம்ப கர்த்தா சுமந்திரன். ‘கர்மா’ அல்லது ‘வினைப்பயன்’ என்பது ஒருவரின் தற்போதைய மற்றும் முந்தைய ஜென்மத்தில் செய்த செயல்களின் கூட்டுத்தொகையாகும். இதுதான் தற்போது சுமந்திரனுக்கும் நடந்து வருகின்றது. அந்த ‘கர்மா’ தான் சுமந்திரனை ‘‘பூமராங’காக தாக்கியுள்ளது. வினை விதைத்தவன் வினையைத்தானே அறுக்க முடியும். எப்படி தினையை எதிர்பார்க்க முடியும்?

கடிதங்கள்

அடையாள கற்சுவரை அமைக்க வேண்டும்

உக்குவளை நகரிலிருந்து எல்கடுவ, வத்தேகம, மாத்தளை, வெஹிகல, கலல்பிட்டிய ஆகிய இடங்களுக்கு செல்வதற்கான இடங்களைக் குறிக்கும் பழைமைமிக்க அடையாள சுற்றுவட்ட கற்சுவரொன்று (Roundabout) உக்குவளை நகர மத்தியில் இருந்தது. இதனால் தூர பிரதேசங்களில் இருந்து வருவோருக்கு தாம் போக வேண்டிய இடங்களை மிக இலகுவாக கண்டறிந்து செல்ல கூடியதாக இருந்தது.

சமீபத்தில் இச்சுவர் வீதி அதிகாரசபையினால் உடைத்து அகற்றப்பட்டதால் பயணிகள் தாம் போக வேண்டிய இடங்களை உக்குவளையிலுள்ளவர்களிடம் அல்லது வர்த்தகர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மீண்டும் இடங்களைக் குறிப்பிட்ட அடையாள கற்சுவரை அமைக்க சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– ஏ.எம்.ஜலீல்

161ஆவது பொலிஸ் வீரர்கள் நினைவு தினம்

இலங்கை பொலிசின் 161ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் 2025.03.21ஆம் திகதியாகும். இன்றைய தினத்தில் நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த பொலிஸ் வீரர்களை ஒவ்வொரு வருடமும் நினைவு கூர்ந்து வருகின்றனர்.

நாட்டின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் போது நாட்டு மக்கள் முகம் கொடுத்துள்ள சாதகம் மற்றும் பாதகமான சம்பவங்கள் தொடர்பான புரிதல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். வீரர் என்பவர் சமூகத்தில் பாரபட்சத்துடன் அசாதாரணமான முறைகள் ஏற்படும் சந்தர்ப்பத்தின் போது, பலரது உயிர் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகத் தானாக முன்வந்து தனது உயிரைப் பணயம் வைப்பவர்களே சிறந்த வீரர்கள் என சந்தேகமின்றி குறிப்பிட முடியும். பொது நலனுக்காகத் தனது உயிருக்கு ஆபத்து என தெரிந்தும் பலரது உயிர்களைப் பாதுகாப்பதற்காக உயிர்த் தியாகம் செய்த பொலிஸ் வீரர்களுக்கு இன்றைய தினத்தில் உணர்வுப் பூர்வமாக நினைவு கூர்வது குறைந்தபட்ச மரியாதையாகும். நாம் அனைவரும் சுதந்திரம் என்ற மூச்சை சுவாசித்து நாம் விரும்பியபடி நடமாடுகின்றோம் என்றால் அவர்கள் நமக்காக தங்களை அர்ப்பணிப்புச் செய்த காரணத்தினாலேயே. இலங்கை பொலிஸார் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 21ஆம் திகதியன்று நினைவு கூறுவது இன்று நாம் அனைவரும் ஒன்றாக கைகோர்த்து சுதந்திரமான வாழ்க்கையை வாழ்வதற்கான காரணம், பொலிஸ் வீரர்களின் உயிர்த் தியாகமாகும்.

1864 மார்ச் 21ஆம் திகதி அன்று சபான் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் தனது கடமை நேரத்தின் போது குற்றத்தைத் தடுப்பதற்காகத் துணிச்சலாக செயல்பட்டு அக் குற்றச் செயல்களைத் தடுத்த போது, உயிர்த் தியாகம் செய்துள்ளார். நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்ததில் அவரே பொலிஸ் வீரர்களின் பட்டியலில் முதல் இடம்பிடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. உத்துவன் கந்தே சரதியல் என்ற நபரைக் கைது செய்வதற்காக முற்பட்ட வேளை சரதியல் என்பவரின் சகாக்களின் ஒருவரான மம்மலே மரிக்கார் என்பவரால் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் சபான் அவர்கள் உயிர்த் தியாகம் செய்துள்ளார். அவரை நினைவு கூர்வதற்காக கொழும்பு கண்டி பிரதான வீதியில் மாவனெல்லைப் பொலிஸ் பிரதேசத்தில் அவரின் நினைவுச் சின்னத்தை கேகாலை மாவட்டத்திற்குப் பொறுப்பான அப்போதைய அரசாங்க அதிபர் ஈ.ஆர்.சொன்டசர் என்பவரால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சபானின் உயிர்த் தியாகத்திற்கு பின்னர், அவர் உயிர்நீத்த தினமே பொலிஸ் வீரர்கள் தினம் என பெயரிடப்பட்டுள்ளது. மேலும் 1894இல் பொரளைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய போது கொலை செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள், 289 கே.தம்பிமுத்து என்பவரின் பெயரும் பொலிஸ் வீரர்கள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பொலிஸ் கடமைகளின் போது, உயிர்நீத்த சபான், தொடக்கம் தற்போது வரை இலங்கை பொலிஸ் இழந்துள்ள பொலிஸ் வீரர்களின் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதுடன், இறுதியாக பொலிஸ் வீரர்கள் பட்டியலில் பொலிஸ் சாஜன்ட் 55,175 எஸ்.எம்.தர்மரத்ன என்பவர் 2024.09.30ஆம் திகதியன்று கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய போது, உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்துள்ள பொலிஸ் உத்தியோகத்தர் விபத்து ஒன்று ஏற்பட்டு வீதியிலிருந்த செயல்படாத மோட்டார் சைக்கிள் ஒன்றை விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்ற போது பாதசாரதி கடவையினூடாக இடது பக்கத்திலிருந்து வலதுபக்கத்திற்கு கடக்கும் போது எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து

ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

மூன்று தசாப்தக்கால யுத்தம் காரணமாக இலங்கை இராணுவத்தினருக்கு அடுத்தபடியாக அதிகமாக உயிர்த் தியாகம் செய்தது இலங்கை பொலிஸாராகும். இவ்வாறு 2,598 பொலிஸார் உயிர்த் தியாகம் செய்துள்ளதுடன், 1,575 பொலிஸார் யுத்தத்தில் ஊனமடைந்துள்ளார்கள். அதேபோன்று, நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாப்பதற்காகத் துணிச்சலாக தங்களது கடமைகளில் ஈடுபட்ட போது 3,161 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிர்த் தியாகம் செய்துள்ளதுடன், 44 பொலிஸ் உத்தியோகத்தர்கள்ஊனமுற்றுள்ளனர். இவ்வாறு உயிர்த்தியாகம் செய்துள்ள பொலிஸ் வீரர்களுக்காக இலங்கை பொலிஸார் மற்றும் நாட்டின் குடிமக்கள் அனைவரும் பெருமையுடன் பொலிஸ் வீரர்கள் தினத்தன்று நினைவு கூர்ந்து வருகின்றனர்.

குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் ஆண்கள் வேறுபாடின்றி, சகல நபர்களினதும் உயிர்களை துச்சமாக மதிக்கும் திட்டமிடப்பட்ட குற்றவாளிகள் மற்றும் சமூகத்தைச் சீரழிக்கும் நோக்குடன் செயல்பட்டு வரும் போதைப்பொருள் வர்த்தகர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காகப் பதில் பொலிஸ் மா அதிபரின் மேற்பார்வையில் மற்றும் அவரின் உத்தரவிற்கமைய இலங்கை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான ஆபத்தான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, அமைதியான சூழலை உருவாக்கி சகலரினதும் உயிர்களைப் பாதுகாத்து அதை உறுதிப்படுத்துவதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரவுப் பகல் பாராது தங்களது கடமைகளைச் செய்து வருகின்றனர்.

161ஆவது பொலிஸ் வீரர்கள் தினத்தை 2025.03.21ஆம் திகதியாகிய இன்று மிகவும் உணர்வுப்பூர்வமாக அனுஷ்டிப்பதற்காக யுத்தத்தின் போதும் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாப்பதற்காகவும் தங்களது உயிர்களைத் தியாகம் செய்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்ப உறுப்பினர்கள் 30 பேர் மற்றும் ஊனமுற்றவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 20 பேருக்கும் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அவர்களினால் பொலிஸ் சேமைப் படை தலைமையகத்திலுள்ள பொலிஸ் வீரர்கள் நினைவுச் சின்னத்திற்கு மாலைகள் அணிந்து நினைவு கூர்தல், அப் பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்ப உறுப்பினர்களைக் கௌரவத்துடன், வரவேற்று அவர்களுக்கு பொலிஸ் மா அதிபரின் கரங்களினால் சகலருக்கும் சாசோலை வழங்குதல் போன்ற நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனர்.

161ஆவது பொலிஸ் வீரர்கள் தினத்தை மிகவும் உணர்வுடன் நினைவு கூர்வது இலங்கை குடிமக்களின் கடமையாகும்.

இலங்கையில் விஞ்ஞானக் கல்வி

சரியான பாதையில் பயணிக்கின்றதா?

நாம் நான்காவது கைத்தொழில் புரட்சியின் சகாப்தத்தில் சமூகங்கள் மற்றும் பொருளாதாரங்களை அதிவேகமாக மறுசீரமைக்கும் தொழில் நுட்பங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

பல்நோக்கு உலக ஒழுங்கை நோக்கிய போக்குகள் காரணமாக உலகளாவிய விவகாரங்களும் சிக்கலானதாகி விட்டன. தற்போதைய இலங்கைப் பொருளாதாரத்தின் அவல நிலையைக் கருத்திற் கொண்டு பெரும் பொருளாதார சீர்திருத்தம் மற்றும் பொருளாதார பல்வகைப்படுத்தல் ஆகியவை விவேகமான விவாதப் பொருளாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்வியானது பரிமாறத்தக்கத் திறன்களைக் கொண்ட ஒரு தனி மனிதனை உருவாக்குவது மட்டுமன்றி உள்நாட்டில் திடவுறுதியுடனும் உலகளாவிய தொழிற் சந்தையில் போட்டித் தன்மையுடனும் இயங்க வைப்பதில் மையப் பங்காற்றுகின்றது.

கல்வியில் சமத்துவத்தை செயற்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் மற்றும் அவை எதிர்கால பணியாளர்களுக்குப் பொருத்தமானதாக மாறுவது மிகவும் ஆர்வமான ஒரு விடயமாகவுள்ளது. விரைவாக மாற்றியமைக்கத் தொலை நோக்கான கொள்கை. நிறுவன பொறுப்புணர்வு மற்றும் பொதுவான சவால்களை எதிர்கொள்வதற்கான ஒத்துழைப்பு ஆகியவை முக்கியமானவை.

1944இல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞான முன்னேற்றக்கழகம் (SLAAS) என்பது இலங்கை பிரஜைகள் மத்தியில் விஞ்ஞான அறிவை மேம்படுத்துவதற்கான உரிமைக் கட்டளைகளைக் கொண்ட கல்வியாளர்கள் மற்றும் விஞ்ஞான நிபுணர்களின் முதன்மையான அமைப்பாகும். (SLAAS) இன் விஞ்ஞான கல்விக் குழு (SEC) இலங்கையில் விஞ்ஞானக் கல்வியில் சமகாலப் பிரச்சினைகள் குறித்த உரையாடலைத் தொடர்ந்து ஊக்குவித்து கொள்கை வகுப்பாளர்களுக்கு ஆதரவு வழங்குகின்றது. பாடசாலை விஞ்ஞானப் பாடத்திட்டம் தொடர்பான சிக்கல்கள் குறித்து 2022 இல் ஒரு விரிவான ஆய்வு நடாத்தப்பட்டு அதே வருடம் டிசெம்பரில் ஆர்வலர்களுடனான கூட்டமும் நடைபெற்றது. இதன் விளைவாக இந்தக் கட்டுரையானது ஒப்பீட்டுக் கல்வி முன்னுரிமை நடவடிக்கைகளின் பகுதிகள் மற்றும் நிலவிவரும் தொடர்ச்சியான சிக்கல்களில் சிலவற்றைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளின் கட்டமைப்பைப் பற்றிய முன்னோக்குகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது.

(SLAAS)-(SEC)ஆனது பல்கலைக்கழக மாணவர்கள் விஞ்ஞானிகள் மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களிடையே கருத்துக் கணிப்பு ஒன்றை நடாத்திய போது கணக்கெடுக்கப்பட்டவர்களில் 90% இற்கும் அதிகமானோர் நடைமுறை விஞ்ஞான பாடத்திட்ட மாற்றத்தை ஆதரிப்பதாகக் கண்டறியப்பட்டது. திட்ட அடிப்படையிலான கற்றல் மற்றும் நடைமுறைப் பணிகள் ஆகியவை மாணவர்களின் செயல் முறை சார்ந்த திறன்களை கணிசமாக மேம்படுத்தும் என்று அவர்கள் உணர்கின்றார்கள். போட்டித் தேர்வுகள் வரையறுக்கப்பட்ட திறன்களை மட்டுமே பரீட்சிக்கின்றன எனவும் 21ஆம் நூற்றாண்டின் தொழிலாளர் சந்தைகளுக்கு அத்தியாவசிய திறன்களை பெரும்பாலும் கவனிக்கவில்லை எனவும் பெரும் பான்மையானவர்கள் கருதுகின்றனர். சிறுவயதிலிருந்தே அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கு போதுமான பௌதீக மற்றும் மனித வளங்களை வழங்க பாடசாலை அமைப்பு அதிகாரம் பெற்றிருக்க வேண்டும் என அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். (SEC) ஆனது ஒப்பீட்டுக் கல்வியில் (அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள நாடுகள்) ஒரு கணக்கெடுப்பை மேற்கொண்டு சில பொதுவான போக்குகளைக் கண்டறிந்தது. இந்த ஆய்வுகளின் அடிப்படையில் இலங்கைப் பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி மற்றும் பொதுவாகக் கல்வி எதிர் கொள்ளும் சில பிரச்சினைகளை (SEC) இனால் அடையாளம் காணமுடிந்தது. இவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

விஞ்ஞானத்தின் நடைமுறை அம்சங்களை அணுகுவதில் மாணவர்களுக்கு குறைந்த வாய்ப்புக்களே காணப்படுகின்றன. பெரும்பாலான பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு மேல் நிலை வகுப்புக்களில் (தரம் 10-13) கூட களப்பணி மற்றும் ஆய்வகப் பணிகள் மிகவும் குறைவாகவேயுள்ளன. விஞ்ஞான வகுப்புக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன்களை வளர்க்காது பல அறிவியல் உண்மைகளை மனனம் செய்வதில் கவனம் செலுத்துகின்றன. க.பொ.த. உயர்தரப் பரீட்சையானது அதன் நோக்கத்தில் மிகவும் குறுகியதாக ஒருபுறம் இருக்க மாணவர்களைப் பல்வேறுபட்ட பல்கலைக்கழக பாட நெறிகளில் பதிவு செய்வதற்கும் நவீன வேலைத்தளங்களின் தேவைகளை எதிர்கொள்வதற்கும் போதுமான அளவில் தயார்ப்படுத்துவதில்லை.

நீண்டகால பாடசாலை கல்வி க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றுவதில் தாமதம் மற்றும் அரச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்குவதில் ஏற்படும் தாமதம் போன்ற காரணங்களால் மாணவர்கள் 20 – 21 வயது வரையில் பல்கலைக்கழகங்களில் சேர முடியாத நிலையைக் காணக் கூடியதாகவுள்ளது. உலகளாவிய ரீதியில் ஒப்பிடும் போது, மாணவர்கள் பொதுவாக 18 வயதில் பல்கலைக்கழகத்திற்குள் நுழைகின்றார்கள்.

க.பொ.த. உயர்தர கல்வியினைப் புறக்கணித்து உயர்தர பரீட்சைக்குச் சமமான அடிப்படைக் கல்வி மற்றும் பட்டப்படிப்பு திட்டங்களுக்கு (பெரும்பாலும் வெளிநாட்டுக் கல்விப் பயிற்சி அடிப்படையிலானவை) முன் கூட்டியே அனுமதி வழங்குவதன் மூலம் இறுதியில் தனியார் நிறுவனங்கள் இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் தொடங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பா கண்டத்திலுள்ள முக்கிய நாடுகளிலும் அமெரிக்கா மற்றும் ஜப்பானிலும் நிலவும் கல்வி அமைப்புக்கள் ஆய்வு செய்யப்பட்டன. இந்த நாடுகளில் பெரும்பாலானவற்றில் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் காலம் 12 வருடங்கள் ஆகும். இருப்பினும், சில ஜேர்மன் மாநிலங்களில் 13 வருடங்களாகவும் உள்ளன. மாணவர்கள் 18-19 வயதில் பல்கலைக்கழக நுழைவைப் பெறுகிறார்கள். பல தசாப்தங்களுக்கு முன்பு இருந்தது போலவே 12 வருட பாடசாலை கல்வி போதுமானது என்றும் குறைந்தபட்சம் ஒருவருடம் முன்னதாகவே மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் நுழையமுடியும் என்றும் இலங்கை ஆர்வலர்களிடையே (பெரும்பாலான கல்வி வல்லுநர்கள்) பொது உடன்பாடு இருந்தது.

பரீட்சை நடாத்துதல் மற்றும் பரீட்சை முடிவுகளை வெளியிடல் பல்கலைக்கழக நுழைவுக்காக மாணவர்களைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பிலான தர்க்க ரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பதனாலும் கால தாமதத்தை ஏற்படுத்தாத வகையில் நாட்காட்டிகளைச் சரி செய்வதனாலும் பல்கலைக்கழக நுழைவில் ஏற்படும் இக்கால தாமதத்தைக் குறைத்துக் கொள்ளலாம். பாடசாலைக் கல்வியின் கால அளவைக் குறைத்து மாணவர்கள் 18 - 19 வயதிலேயே பல்கலைக்கழகத்தில் நுழைய வழிவகுப்பதன் மூலம் பெறப்படும் பொருளாதார நன்மைகள் வெளிப்படையானவை. ஒரு புறம் கல்விச் செலவு குறையும் .மறுபுறம் பல்கலைக்கழக பட்டதாரிகள் தற்போது இருப்பதை விட குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே தொழிலாளர் சந்தையில் நுழைய முடியும்.

(வெள்ளிக்கிழமை தொடரும்...)

சுனிதா வில்லியம்ஸ் பூமிக்கு திரும்பிய தருணம்

ஒரு நெகிழ்ச்சி அனுபவம்







சுமார் 286 நாட்கள் விண்வெளியில் கழித்துவிட்டு பூமிக்குத் திரும்பியுள்ளனர் இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளி வீரர் பேரி வில்மோர் உள்ளிட்ட 4 பேர். ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் மூலம் பத்திரமாக பூமிக்குத் திரும்பியுள்ளனர்.

இலங்கை நேரப்படி புதன்கிழமை அதிகாலை 3.27 மணிக்கு புளோரிடா கடலில் டிராகன் ஸ்பிளாஷ் டவுன் ஆகும் தருணத்தை உலக நாடுகள் அனைத்தும் உற்றுக் கவனித்தன. அந்த ஸ்பால்ஷ் டவுன் வெற்றிகரமாக அமைந்து அதிலிருந்து சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட 4 விண்வெளி வீரர்களும் வெளியே வந்த தருணத்தில் அவர்களின் கையசைவுகளும், புன்னகைகளும் உலகளவில் மகிழ்ச்சியையும், நிம்மதியையும் கடத்தியது என்றே கூறலாம்.

“இந்தியாவின் மகளே” என்று பிரதமர் மோடி சிலாகித்ததும், குஜராத்தில் சுனிதா வில்லியம்ஸின் பூர்வீக கிராமமான ஜுலாசனில் பட்டாசுகள், இனிப்பு, ஆட்டம் பாட்டு எனக் களைகட்டிய கொண்டாட்டமும் அந்தத் தருணத்தை உணர்வுபூர்வமாக்கின. அறிவியல் சாதனை பெருக்கெடுத்த அன்பினால் நெகிழ்ச்சியான ஆன தருணமாக அது அமைந்தது எனலாம்.

இதுவரை விண்வெளி வீரர், வீராங்கனைகள் அதிகபட்சமாக இரண்டு வெவ்வேறு விண்கலங்களில் மட்டுமே பயணம் செய்துள்ளனர்.

ஆனால், சுனிதா வில்லியம்ஸ் ஸ்பேஸ் ஷட்டில், சோயூஸ், போயிங் ஸ்டார்லைனர், ஸ்பேஸ்எக்ஸ் க்ரூ டிராகன் ஆகிய நான்கு வெவ்வேறு விண்கலங்களில் பயணம் செய்த அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்.

இதனாலேயே அவர் ‘ஸ்டார் ஆஸ்ட்ரோனட்’ அந்தஸ்தைப் பெற்றுள்ளார். அத்தனை கவனமும் அவர் மீதே குவிகிறது. அவர் சாதனையில் இந்தியாவும் பெருமைப் பட்டுக்கொள்கிறது.

8 நாட்கள் பயணம் 9 மாதங்கள் ஆனது ஏன்?

கடந்த ஆண்டு ஜூன் 5ஆம் திகதி அமெரிக்காவின் போயிங் நிறுவனம் தயாரித்த ஸ்டார்லைனர் என்ற புதிய விண்கலத்தில் சுனிதா வில்லியம்ஸ், பேரி வில்மோர் ஐஎஸ்எஸ் எனப்படும் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்றனர். அவர்களின் திட்டம் 8 நாட்கள் அங்கு இருந்து ஆய்வுகளை மேற்கொள்வது.

ஆனால், ஸ்டார்லைனரில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்படவே சுனிதா, வில்மோர் அங்கேயே தங்கும் நிலை ஏற்பட்டது. 8 நாட்கள் பயணம் 9 மாதங்களானது இதனால் தான்.

இந்த 286 நாட்களில் சுனிதாவும், வில்மோரும் விண்வெளியில் 121 மில்லியன் ஸ்டாட்யூட் மைல் பயணித்துள்ளனர். ஒரு ஸ்டாட்யூட் மைல் என்பது கிட்டத்தட்ட 5,280 அடி எனக் கொள்ளலாம்.

இந்நிலையில், எலான் மஸ்க், முந்தைய பைடன் அரசு சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட குழுவினரை மீட்க எந்தவித நடவடிக்கையும் முறையாக எடுக்கவில்லை என்ற அரசியல் ரீதியான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். ஆனால் அதற்கான ஆதாரங்கள் எதையும் அவர் கூறவில்லை.

அரசியல் காரணமா?

பொதுவாகவே, சர்வதேச விண்வெளி நிலையத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வீரர்கள் தங்கியிருந்து ஆய்வு செய்வதும், புதிய வீரர்கள் ஐஎஸ்எஸ் நிலையம் வந்த பிறகு அவர்களிடம் பணிகளை ஒப்படைத்துவிட்டு பழைய வீரர்கள் பூமிக்கு திரும்புவதும் வழக்கம். இப்படித்தான் சுனிதாவும், வில்மோரும் அங்கு சென்றனர்.

இப்போது அவர்கள் பூமிக்குத் திரும்பிய நிலையில் புதிய குழுவினர் ஐஎஸ்எஸ் விண்வெளி நிலைய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். எனவே, சுனிதாவும், வில்மோரும் அங்கே சிக்கிக் கொண்டார்கள் என்று சொல்வதற்குப் பின்னணியில் சில அரசியல் காரணங்கள் இருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

வெள்ளை மாளிகையின் வரவேற்பு

ஸ்பேஸ் எக்ஸ், நாசா இணைந்து விண்வெளி வீரர்களை பத்திரமாக பூமிக்கு அழைத்து வந்த நிலையில் வெள்ளை மாளிகை எக்ஸ் தளத்தில் பகிர்ந்த பதிவில், “வாக்குறுதி அளித்தார். அதை நிறைவேற்றினார். 9 மாதங்களாக விண்வெளியில் சிக்கிக் கொண்ட வீரர்களை ட்ரம்ப் பத்திரமாக மீட்டுக் கொண்டுவந்துள்ளார். நாசா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களுக்கும் எலான் மஸ்குக்கும் நன்றி” என்று குறிப்பிட்டுள்ளது.

அடுத்த 45 நாட்கள்...

தொடர்ச்சியாக பல மாதங்கள் விண்வெளியில் இருந்து விட்டதால் கை, கால் செயல்பாடுகளில் சிரமம், தலை சுற்றல், தசை சிதைவு உள்ளிட்ட பல்வேறு உபாதைகளுக்கு விண்வெளி வீரர்கள் ஆளாகக்கூடும் என்பதால் சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட 4 பேரும் ஹூஸ்டனில் உள்ள நாசா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் ஓரிரு தினங்களில் குடும்பத்தினரை சந்திக்க அவர்கள் அனுமதிக்கப்படுவர். அதன் பின்னர் 45 நாட்கள் வரை அந்த மருத்துவமனையிலேயே தங்கி மறுவாழ்வு சிகிச்சைகளைப் பெறுவர்.

சுனிதா பூமிக்குத் திரும்பிய தருணம் குறித்து அவரது உறவினர் தினேஷ் ராவல் ஏஎன்ஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்தப் பேட்டியில், “நேற்றுவரை எனக்கு பதற்றமாகவே இருந்தது. சுனிதாவை பூமியில் பார்த்ததும் நாங்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தோம். இறைவன் எங்கள் பிரார்த்தனைகளைக் கேட்டு சுனிதாவை பத்திரமாக அழைட்துவரச் செய்துள்ளார்” என்றார்.

ராஜ்நாத் சிங் பாராட்டு...

“சுனிதா வில்லியம்ஸின் வியத்தகு பயணம், அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, மன உறுதி மற்றும் போராட்ட குணம் உலகெங்கிலும் உள்ள கோடிக் கணக்கானோருக்கு உத்வேகம் அளிக்கும். அவர் பாதுகாப்பாக திரும்புவது விண்வெளி ஆர்வலர்களுக்கும் முழு உலகுக்கும் ஒரு கொண்டாட்ட தருணம். அவரது துணிச்சலும், சாதனைகளும் நம் அனைவரையும் பெருமைப்படச் செய்கிறது” என்று பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அந்த இந்தியத் தொடர்பு...

அமெரிக்காவின் ஓஹியோ மாகாணத்தைச் சேர்ந்த இந்தியரான தீபக் பாண்ட்யாவுக்கும் ஸ்லோவேனியாவைச் சேர்ந்த உர்சுலின் போனிக்கும் பிறந்த மூன்று குழந்தைகளில் கடைக்குட்டிதான் சுனிதா வில்லியம்ஸ். இந்தியாவைக் குறிக்கும் விதமாக சமோசாவையும் ஸ்லோவேனியாவைச் சுட்டும் வகையில் அந்த நாட்டுக் கொடியையும் விண்வெளிக்கு சுனிதா எடுத்துச் சென்றார். அந்த இந்தியத் தொடர்பு தான் சுனிதாவை இந்தியர்கள் கொண்டாடக் காரணமாகியுள்ளது.

அமெரிக்கா

பூமிக்கு வந்த விண் தேவதையை

வரவேற்ற டொல்பின்கள்

விண்வெளியில் உள்ள ஐ.எஸ்.எஸ். எனப்படும் சர்வதேச விண்வெளி மையத்தில் 9 மாதங்களாக இருந்த சுனிதா வில்லியம்ஸ் (59), மற்றும் புட்ச் வில்மோர் (62) ஆகியோர், புதன்கிழமை (19) அதிகாலை, பூமிக்கு திரும்பினர்.

அவர்களை சுமந்துள்ள 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனத்தின் 'டிராகன்' விண்கலம், இலங்கை நேரப்படி, புதன்கிழமை (19) அதிகாலை 3:27 மணிக்கு, புளோரிடா அருகே, பாதுகாப்பாக கடலில் தரையிறங்கியது.

பாராசூட் அவர்களின் கேப்சூலை கடலில் இறக்க, ஏற்கெனவே அங்கு வந்திருந்த நாசா அதிகாரிகள், விண்கலத்தில் இருந்து சுனிதா வில்லியம்ஸ் உட்பட 4 பேரையும் படகில் ஏற்றி அழைத்துச் சென்றனர்.

பூமிக்கு திரும்பிய விண்வெளி வீரர்கள் 4 பேரும் உற்சாகத்துடன் கையசைத்தனர். தற்போது அவர்களால் நடக்க முடியவில்லை என்றாலும், ஒரு வாரத்தில் இயல்பு நிலைக்கு திரும்புவார்கள் என கூறப்படுகிறது.

முன்னதாக, நால்வரும் பயணித்த டிராகன் கேப்சூல் படிப்படியாக வேகம் குறைந்து கடலில் விழுந்ததும், விண்வெளி வீரர்களை வரவேற்பது போல் கேப்சூலை சுற்றி டொல்பின்கள் சூழ்ந்தன.

விண்கலம் கடலில் விழுந்தபோது, அதைச் சுற்றி பல டொல்பின்கள் மேற்புறத்தில் நீந்திக் கொண்டிருந்தது கெமெராக்களில் தெளிவாக தெரிந்தது. இதனை நேரடி ஒளிபரப்பு செய்து கொண்டிருந்த நாசா விஞ்ஞானிகள், அது மீட்புக் குழுவுக்குக் கிடைத்த பெருமை என்று கூறினர்.

விண்ணை தொட்ட விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் பாதுகாப்பாக மண்ணைத்தொட்டார்.

விண்வெளியில் பல சோதனைகளை பதற்றமின்றி சிரித்தப்படி கையாண்டார் விண் தேவதை சுனிதா.

விண்வெளிக்கு சென்ற சுனிதா விண்ணில் அதிக நேரம் விண்நடை மேற்கொண்டு சாதனை புரிந்தார். சுமார் 30 ஆண்டுகள் நாசா நடத்திய பல சோதனைகளில் சுனிதா வில்லியம்ஸ் சாதனைகள் படைத்தார்.

பூமி மேல் பறக்கணும் என்ற ஆசையை அவர் நிறைவு செய்துள்ளார்.

சாதனை படைத்தார் சுனிதா

அமெரிக்கா

உலகளவில் விண்வெளியில் அதிக நாட்களை கழித்த வீரர்கள் பலர் உள்ளனர். அந்த பட்டியலில் முதல் இடத்தில் ரஷ்ய வீரர்கள் உள்ளனர். அவர்களை தொடர்ந்து அமெரிக்க வீரர்கள் உள்ளனர்.

ரஷ்யாவை சேர்ந்த விண்வெளி வீரரான ஒலெக் கோனோனென்கோ 1,110 நாட்கள் விண்வெளியில் கழித்துள்ளார். அவரை தொடர்ந்து மற்ற ரஷ்ய வீரர்களான கென்னடி படல்கா (878 நாட்கள்), செர்கெய் க்ரிகலெவ் (803 நாட்கள்), அலெக்சாண்டர் கலேரி (769 நாட்கள்), செர்கெய் அவ்தெயெவ் (747 நாட்கள்) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்து உள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்க விஞ்ஞானியான பெக்கி விட்சன் 675 நாட்களை விண்வெளியில் கழித்துள்ளார். அவருக்கு அடுத்து ரஷ்ய விண்வெளி வீரர்களான ப்யோடர் யுர்சிகின் (672 நாட்கள்), யூரி மாலென்சென்கோ (641 நாட்கள்) ஆகியோர் உள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விஞ்ஞானியான சுனிதா வில்லியம்ஸ் (609 நாட்கள்) உள்ளார். இதனால், விண்வெளியில் அதிக நாட்களைக் கழித்த அமெரிக்க விண்வெளி வீரர்கள் வரிசையில் சுனிதா வில்லியம்ஸ் 2ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

சுனிதா வில்லியம்சுடன் சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஒன்றாக பணிபுரிந்த பேர்ரி புட்ச் வில்மோர் (462 நாட்கள்) விண்வெளியில் அதிக நாட்களைக் கழித்த 6ஆவது அமெரிக்க விண்வெளி வீரராக உள்ளார்.

"ஒலிம்பிக் பதக்கங்களை அதிகரிக்க வேண்டும்"

ஒலிம்பிக் பதக்க எண்ணிக்கையை நாங்கள் அதிகரித்துக்கொள்ள வேண்டியுள்ளது. அந்த பொறுப்பு தேசிய மக்கள் சக்திக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதனை நாங்கள் மேற்கொள்வோம், அதற்கு தேவையான வகையில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்ய நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலக்கரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(18) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

இலங்கையிலிருந்து 1948ஆம் ஆண்டு முதல் இதுவரை 107 பேரே ஒலிம்பிக் போட்டியில் பிரதிநிதிப்படுத்தி இருக்கின்றனர். இந்த எண்ணிக்கை போதுமானதல்ல. இதனை நாங்கள் அதிகரிக்க வேண்டும். அதேநேரம், இதுவரை எங்களுக்கு 2 ஒலிம்பிக் பதக்கங்களையே வெற்றிகொள்ள முடிந்துள்ளது . 1948ஆம் ஆண்டு டங்கன்வைட் பதக்கம் வென்றார் அதன் பின்னர் 2000ஆம் ஆண்டு சுசந்திகா ஜயசிங்க பதக்கம் வென்றார். அதன் பின்னர், எங்களால் எந்தவொரு ஒலிம்பிக் பதக்கத்தையும் வெற்றிகொள்ள முடியவில்லை.

அதேபோன்று, பொதுநலவாய போட்டிகளில் இதுவரை எமக்கு 24 பதக்கங்களையே வெற்றிகொள்ள முடிந்துள்ளது. ஆசிய போட்டிகளில் அனைத்து வகையான போட்டிகளிலும் 51 பதக்கங்களையே வெற்றிகொள்ள முடிந்தது. அத்துடன், கிரிக்கெட் போட்டியில் உலகக்கிண்ணம் மற்றும் டி-20 உலகக்கிண்ணத்தை ஒரு தடவை வெற்றிகொண்டுள்ளோம். இவையல்லாமல் தனிப்பட்ட வெற்றிகளும் இருக்கின்றன.

எனவே, ஒலிம்பிக் பதக்க எண்ணிக்கையை நாங்கள் அதிகரித்துக்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கு தேவையான வகையில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்ய நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று, பாடசாலை மட்டத்தில் விளையாட்டுத்துறை அபிவிருத்தி செய்து, அந்த மாணவர்களை தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ள வைப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம் என்றார்.

இலங்கை கிரீடா சக்தி கூடைப்பந்தாட்ட அணிக்கு

யாழ். திருக்குடும்ப கன்னியர்மட அணியிலிருந்து நால்வர்

எஸ்.நிதர்ஷன்

இலங்கை கிரீடா சக்தி கூடைப்பந்தாட்ட அணிக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணியை சேர்ந்த நான்கு மாணவிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு புளூஸ் கூடைப்பந்தாட்ட திடலில் இதற்கான தெரிவு அண்மையில் இடம் பெற்றது. இதில் திருக்குடும்ப கன்னியர்மட அணியைச் சேர்ந்த

சகானா விஜருபன், எஸ்தார் ஜாக்சன், டிலான் காசில்டா, ஆர். லோட்சி ஆகியோரே தெரிவாகினர்.

மாவட்ட சாம்பியனான

மண்முனை வடக்கு பிரதேச செயலக வலைப்பந்தாட்ட மகளிர் அணியினருக்கு பாராட்டு

வி.ரி.சகாதேவராஜா

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் மண்முனை வடக்கு பிரதேச செயலக அணி சம்பியனானது.

இந்நிலையில் பிரதேச செயலக, மாவட்ட செயலக அணிகளுடன் மோதி சம்பியனான மண்முனை வடக்கு பிரதேச செயலக அணியை மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெத்தினம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் அண்மையில் பாரிய வரவேற்பளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

ரஷ்யா

30 நாட்களுக்கு உக்ரைன் மீதான

தாக்குதலை நிறுத்துகிறது ரஷ்யா



30 நாட்களுக்கு உக்ரைன் பகுதியில் உள்ள எரிசக்தி கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தப்படாது என்று, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்த ட்ரம்ப்பிடம் உறுதியளித்துள்ளார்.

மூன்றாண்டுகளாக நீடித்துவரும் உக்ரைன் - ரஷ்ய போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் செவ்வாய்க்கிழமை (18) பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த பேச்சுவார்த்தையின் போது ட்ரம்ப் உக்ரைனைப் போல் ரஷ்யாவும் 30 நாட்கள் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால், புட்டின் அதனை முழுமையாக ஏற்கவில்லை. மாறாக 30 நாட்களுக்கு உக்ரைனின் எரிசக்தி கட்டமைப்புகளைக் குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் மட்டும் நடக்காது என்று கூறியுள்ளார்.

"30 நாட்கள் போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டால் உக்ரைன் அந்த காலகட்டத்தைப் பயன்படுத்திக் கூடுதல் படைகளை, ஆயுதங்களைக் குவிக்கும். தன்னை இராணுவ ரீதியாக பலப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளும். எங்களைப் போர் நிறுத்தத்துக்கு அழுத்துவதைக் காட்டிலும் உக்ரைனுக்கு வெளிநாடுகள் வழங்கிவரும் இராணுவ தளவாட உதவிகள், உளவுத் தகவல்களை நிறுத்தினாலே போர் முடிவுக்கு வரும்." என்று புட்டின் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உத்தரப் பிரதேசம்

பட்டியலின மக்கள் படுகொலை:

44 ஆண்டுகளுக்கு பின் தீர்ப்பு

சுமார் 44 ஆண்டுகளுக்கு முன்னர், பட்டியலின மக்களை சுட்டுக்கொன்ற சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தின் தெஹ்லி கிராமத்தில், 1981ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி அன்று, மாலை 4.30 மணியளவில் காக்கி உடையணிந்த 17 பேர் கொண்ட கொள்ளைக் கும்பல் ஊருக்குள் புகுந்தனர். இவர்கள் அங்கிருந்த பட்டியலின மக்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தினர். இதில், 6 மாத சிசு மற்றும் 2 வயதுடைய இரு குழந்தைகள் உட்பட 24 பட்டியலின சமூகத்தினர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நவம்பர் 19ஆம் திகதி, 1981இல் உள்ளூரைச் சேர்ந்த லயிக் சிங் என்பவரால் முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்) தாக்கல் செய்யப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக கொலை, கொள்ளை போன்ற வழக்குகளின் கீழ் குற்றவாளிகள் 17 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இதில் 14 பேர் வழக்கு விசாரணை நடைபெற்ற காலத்திலேயே உயிரிழந்தனர். அப்போதே ஒருவர் தலைமறைவானதாக அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் விரிவான விசாரணையைத் தொடர்ந்து, கொள்ளைக் கும்பலின் தலைவர்கள் சந்தோஷ் மற்றும் ராதே உள்ளிட்ட கொள்ளையர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்கு மெயின்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 44 ஆண்டுகளாக நடைபெற்று வந்தது.

வழக்கின் வாதங்கள் அனைத்தும் முடிந்த நிலையில் கடந்த 12ஆம் திகதியன்று, குற்றம் சாட்டப்பட்டு இருந்த கெப்டன் சிங் (வயது 60), ராம்பால் (60), ராம் சேவக் (70) ஆகிய 3 பேரையும் குற்றவாளிகள் என்று நீதிபதி இந்திரா சிங் தீர்ப்பளித்தார்.

குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்ட, மூவருக்கும் நீதிபதி மரண தண்டனை மற்றும் தலா ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்தார்.

ஐ.பி.எல்: மும்பை இந்தியன்ஸில் ஹர்திக் இல்லாத நிலையில்

அணித் தலைவராக சூரியகுமார்

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) 2025 பருவகாலத்தின் மும்பை இந்தியன்ஸின் ஆரம்பப் போட்டியில் அவ்வணிக்கு சூரியகுமார் யாதவ் தலைமை தாங்கவுள்ளார்.

கடந்த பருவகாலத்தின் மும்பையின் இறுதிப் போட்டியில் மெதுவாகப் பந்துவீசியமைக்காக ஒரு போட்டித் தடையை வழமையான அணித்தலைவர் ஹர்திக் பாண்டியா எதிர்கொண்டுள்ளமை காரணமாகவே சூரியகுமார் மும்பைக்குத் தலைமை தாங்கவுள்ளார்.

ஹர்திக் தவிர முதுகு உபாதையிலிருந்து குணமடைந்து வரும் ஜஸ்பிரிட் பும்ராவும் குறித்த போட்டியை தவற விடவுள்ளார்.

ஐ.பி.எல்:

இம்முறையாவது ஜொலிக்குமா பஞ்சாப் கிங்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) கடந்த பருவகாலத்தில் ஒன்பதாவது இடத்தையே பெற்றிருந்த பஞ்சாப் கிங்ஸ், இறுதியாக 10 ஆண்டுகளுக்கு முன்னரே தகுதிகாண் போட்டிகளுக்குத் தகுதி பெற்றிருந்தது.

அந்தவகையில், ஷஷாங்க் சிங், பிரப்ஸிம்ரன் சிங்கை மாத்திரமே கடந்த பருவகாலத்திலிருந்து தக்க வைத்த பஞ்சாப், அர்ஷ்தீப் சிங்கை ஏலத்தில் வாங்கியிருந்தது.

அணித்தலைவராக கடந்த முறை கிண்ணத்தை வென்ற ஷ்ரேயாஸ் ஐயரைக் கொண்டு வந்து மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், கிளென் மக்ஸ்வெல், யுஸ்வேந்திர சஹால் உள்ளிட்டோரை ஏலத்தில் வாங்கியிருந்தனர்.

ஜொஷ் இங்லிஷ், பிரப்ஸிம்ரன் சிங் ஆகியோரே பெரும்பாலும் ஆரம்பத் துடுப்பாட்டவீரர்களாகக் களமிறங்குவரென எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், ஏனைய அணிகளைப் போல ஆரம்பம் நம்பிக்கை தரக்கூடியதாக இல்லை.

எனவே ஐயர், ஸ்டொய்னிஸ், மக்ஸ்வெல், நெஹால் வதேரா, ஷஷாங் சிங் ஆகியோரை உள்ளிட்ட மத்தியவரிசையே பெரும்பணியாற்ற வேண்டியுள்ளது.

புதிய பந்தில் அர்ஷ்டீப் சிங்குடன் மார்கோ ஜன்சன் பலமாக இருக்கின்ற நிலையில் சஹால், ஹர்பிறீட் பிரார் கூட்டணி விக்கெட்டுகளைக் கைப்பற்றலாம்.

ஐந்தாவது பந்து வீச்சாளராக விஜயகுமார் வைஷாக்கும் இல்லாவிடின் குல்தீப் சென், யஷ் தாக்கூர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

எதிர்பார்க்கப்படும் பதினொருவர் அணி: பிரப்ஸிம்ரன் சிங், ஜொஷ் இங்லிஸ், ஷ்ரேயாஸ் ஐயர் (அணித்தலைவர்), ஷஷாங்க் சிங், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், கிளென் மக்ஸ்வெல், நெஹால் வதேரா, மார்கோ ஜன்சன், ஹர்பிறீட் பிறார், விஜயகுமார் வைஷாக், அர்ஷ்டீப் சிங்க்.

தாக்கம் செலுத்தும் வீரர்கள்: யுஸ்வேந்திர சஹால், யஷ் தாக்கூர், ப்ரியன்ஷ் ஆர்யா, சுர்யன்ஷ் ஷெட்ஜே.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 20, மார்ச் 2025, இல.08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.